பலங்கொட பிரதேச சபை - 2022

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலாங்கொட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் பலாங்கொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபாய்.10,018,820 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெகுமதியாக கிடைக்கப்பட்ட ரூபாய்.8,012,045 தொகையான நிலையான சொத்துக்கள் நிதி செயற்பாட்டு கூற்று மூலம் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான பக்கோ இயந்திரம் ஜனதிரிய நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய நலன்புரி பணிகளுக்கு வழங்கியமைக்கு உரியதாக ரூபாய்.3,612,605 ஆன உத்தேச வாடகை வருமானம் ஒன்று மற்றும் செலவினம் ஒன்று கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபாய்.770,685 தொகையான நிலுவை வருமானம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறொன்றாகும். எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,267,712 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,653,255 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,378,381 | 1,083,059 | 1,030,861 | 134,681 | 1,833,380 | 1,051,400 | 1,080,234 | 100,845 |
| வாடகை | 9,091,650 | 6,222,837 | 5,934,426 | 86,057 | 8,414,900 | 4,517,336 | 4,262,890 | 244,839 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 905,500 | 881,370 | 896,120 | - | 588,500 | 1,021,960 | 922,580 | - |
| ஏனைய வருமானங்கள் | 5,489,500 | 11,573,436 | 10,908,834 | - | 4,335,500 | 5,617,773 | 5,716,706 | 345,684 |
| | 16,865,031 | 19,760,702 | 18,770,241 | 220,738 | 15,172,280 | 12,208,469 | 11,982,410 | 691,368 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வருடங்களை விட பழமையான ரூபாய்.49,814 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதி ஒன்றும் 01 முதல் 17 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.21,300 பழமையான தளக்குத்தகை மீதியும் 2022 | இதுவரையிலும் ஏக்கர் வரியினை அறவிடுவதற்கு மெய்மை ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டவாறு யாக்காஹலோமுக்களான காணித் துண்டுகளுக்குரிய நிலுவைத் தொகையை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காணப்பட்டது. அவ்வாறே யாக்காஹலோமுக்களான காணியின் தரை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 19 காணி துண்டுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் காணப்படவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஆ) | வெலிஓய பொருளாதார மத்திய நிலையத்தின் 02 கடைகளிலிருந்தும் துஹிலிஅல்ல சுற்றுலா நிலையத்தின் கடையொன்றினதும் நிலுவையாக காணப்பட்ட ரூபாய்.64,756 தொகையான உடன்படிக்கை செய்யப்பட்ட பிணைத்தொகையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை எதிர்காலத்தில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் நிலுவையாக காணப்பட்ட தொலைபேசி நிலைப்பாடற்றல் கோபுர கட்டணங்கள் ரூபாய்.27,000 மற்றும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணமான ரூபாய்.169,260 அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பலகைகளை இனங்காணுவதற்கு மீளாய்வாண்டினுள் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை செலுத்துமாறு குறிப்பிட்டு குறித்த நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது மெய்மை ஆய்வொன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொல்வத்துகொட, மஹாவலத்தன்ன காணியின் எல்லைகளை குறிக்கும் வரைபடம் மற்றும் பூமி யோக்கிதை சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபாய்.183,124 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 ஜனவரி வரையிலும் அப்பணிகள் நிறைவேறியிருக்கவில்லை. இதனால் காணியை சுவீகரிக்க முடியாமையால் இராசகல சிறுநகர அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | இந்த காணியை சபைக்கு சுவீகரிப்பதற்கு உரிய நிறுவனங்களிடம் இருந்து பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | குறித்த காணியை சுவீகரித்து நகர அபிவிருத்தி திட்டத்தினை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வெலிஓய நகரின் 2015 ஆம் ஆண்டில் நிர்மாணக்கப்பட்ட ரூபாய்.27,253,473 தொகையான இரு மாடி கட்டிடம் 2022 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | கட்டிட அபிவிருத்திக்காக கடன்தொகை ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளமை. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | அத்துமீறிய நிர்மாணங்களை இனங்காணுவதற்காக முறையான வேலை திட்டம் ஒன்று காணப்படவில்லை. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளினுள் இனங்காணப்படாத 29 நிர்மாணங்கள் சட்டரீதியாக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் பின் தொடர்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய நிர்மாணங்களை பதிவேட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பின் தொடர்தல்களை மேற்கொண்டு அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டவாறு உள்ளமை. | அத்துமீறிய நிர்மாணங்களை சட்டத்திற்கு அமைவாக்கவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 58 சங்கங்களுக்கு ரூபாய்.830,300 ஆன ஹியூம் குழாய்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை நோக்கத்துறைக்குரிய பணிகளுக்கு ஈடுபடுத்தியதா என்பது தொடர்பில் பின் தொடர்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் பின் தொடர்தலொன்று மேற்கொள்ளப்படும் என்பது. | பின் தொடர்தல. தாமதிக்காது மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | சேகரிக்கப்பட்ட கழிவுகளை சூழலுக்கு இசைவான முறையில் அகற்றியிராததுடன் 2022 ஆகஸ்ட் மாதத்தில் மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபாய்.950,000 தொகையான பேலர் இயந்திரம் இரட்டைவட மின் இணைப்பு இல்லாமையால் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டது.. | பேலர் இயந்திரம் இரட்டைவட மின்சார இணைப்பு இல்லாமையால் பயன்படுத்த முடியாதுள்ளமை. | திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சி திட்டமொன்றினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சட்ட சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக பெறுகை நடைமுறையில் இருந்து விலகி மற்றும் முறையான உடன்படிக்கை ஒன்று இல்லாது பொதுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | எதிர்காலத்தில் பெறுகை நடைமுறைக்கு அமைய முறையான உடன்படிக்கை கைச்சாத்திட்டு சட்டத்தரணி ஒருவரை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுகை வழிகாட்டி கோவைக்கமைய செயற்பட வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினுள் மரத்திலான மேடையொன்றினை அமைப்பதற்காக சப்ரகமுவ மாகாணத்தின் விலைக் கேள்வியாளர்கள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தமையால் தகமை வாய்ந்த அனைத்து விலை கேள்வியாளர்களும் முன்வருவதில் காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | சப்ரகமுவ மாகாணத்தினுள் தகைமை வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் காணப்பட்டமை மற்றும் நிர்மாண பணிகளின் இலகுத்தன்மை தொடர்பில் மாகாண விலைக் கேள்வியாளர்களுக்கு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டமை. | பெறுகைகள் வழிகாட்டி கோவைக்கமைய செயற்பட வேண்டும். |